பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 22 திங்கட்கிழமை 05.05.2025 கதிர் 177

### இனி இது ரகசியம் அல்ல!

நாங்கள்தான் ஆளும்கட்சி, எங்களிடம் 159க்கும் மேற்பட்ட பெரும்பான்மையுடன் கூடிய நாடாளுமன்றம்இருக்கிறது. அதுமட்டுமல்ல நிறைவேற்று அதிகாரமுடைய ☞ 2

## பாப்பரசரான அதிபர் ட்ரம்



அமெரிக்க அதிபர் டொனால்ட்டிரம்ப் பாப்பரசராகத் தோன்றும் வகையில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஒரு புகைப்படம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

செயற்கைநுண்ணறிவால்உருவாக்கப்பட்ட இந்தப் புகைப்படத்திற்காக அமெரிக்க ☞ 2

# வெளிநாடுகளுக்கு ஓடி பதுங்கியுள்ள குற்றவாளிகளை பிடித்தே தீருவோம்

## பொலிஸார் திட்டவட்டம்

இலங்கையில் குற்றங்களைச் செய்துவிட்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்ற குற்றவாளிகளை நாட்டுக்குக் கொண்டுவந்தேதீருவோம்என்றுபொலிஸார் தெரிவிக்கின்றனர். இத்தகைய 20க்கும் மேற்பட்ட குற்றவாளிகளைக் கொண்டுவரும் முயற்சிகள்தற்போதுநடைபெற்றுவருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது துபாய், இந்தியா மற்றும் கனடா உள்ளிட்ட நாடுகளில் இவர்கள் பதுங்கியுள்ளனர், அங்கிருந்து அவர்களைப் பிடித்துவருவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே நடைபெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

சமீபத்திய வாரங்களில், பல பாதாள உலகக் குற்றவாளிகள் ஏற்கனவே வெளிநாடுகளில் இருந்து கைதுசெய்யப்பட்டுக் கொண்டு வரப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜூலை 08, 2024 அன்று அதுருகிரிய காவல் பிரிவில் 'கிளப் வசந்த' மற்றும் மற்றொரு நபரின் இரட்டைக் கொலைக்குப் பின்னணியில்இருந்தமுக்கியசந்தேகநபரான லத்துவஹந்தி சுஜீவ ருவன் குமார சில்வா அல்லது'லோகுபட்டி',நேற்றுகுற்றப்புலனாய்வு அதிகாரிகளால்கட்டுநாயக்கவிமானநிலையம் வழியாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட பின்னணியில்பொலிஸ்பேச்சாளர்இதனைத் தெரிவித்தார். ☞ 2

# ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகையைப் பெற நிபந்தனைகளுக்கு காலக்கெடு விதிக்குக

## தவறினால் சலுகையை விலக்கிக் கொள்ளுங்கள் ஐரோப்பிய ஒன்றியத்திடம் தமிழ் அரசு வலியுறுத்து

**நீதியையும், நல்லாட்சியையும், மனிதஉரிமைகளையும்நிலைநாட்டும் தனதுகடப்பாட்டைஇலங்கைநிறைவு செய்வதற்கு நிபந்தனைகளைக் காலம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கவேண்டும். அந்த நிபந்தனைகளை இலங்கை அரசு நிறைவேற்றத் தவறினால் வரிச் சலுகையைவிலக்கிக்கொள்ளுங்கள் என்று நேற்று தம்மைச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றயக் குழுவினரிடம் தமிழ்அரசுக்கட்சியினர்வலியுறுத்தினர்.**

**இந்தச் சந்திப்பு நேற்று இரவு 8 மணி முதல் சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற சந்திப்பி இடம்பெற்றது. தமிழ்அரசுக்கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையிலான இந்தக் குழுவில் கட்சியின்பொதுச்செயலாளர்சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன், வைத்தியர் சிறிநாத் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.**

**ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட கண்காணிப்புக் குழுவில் அதன்** ☞ 2

## பதில் அமைச்சர்கள் நியமனம்

ஜனாதிபதிஅநுரகுமாரஅரசுமுறைப் பயணமாக வியட்நாமுக்குச் சென்றுள்ளதை அடுத்து 4 அமைச்சுக் களுக்குப் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்என்றுஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் கீழ் உள்ள டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கும், அமைச்சர்விஜிதஹேரத்தின்கீழ்உள்ள வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் ☞ 9

## திடீரென மயங்கி வீழ்ந்த கொன்ஸ்டபிள் இறப்பு

தேர்தல் கடமையில் இருந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் மாரடைப்பினால் நேற்று உயிரிழந்துள்ளார். யாழ். மாவட்டம் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அலுவலரே இவ்வாறு உயிரிழந்தார்.

உல்பத்தகம, கல்கிரியாகம, அனுராதபுரத்தைச் சேர்ந்தஒருபிள்ளையின்தந்தையானமுதியன்சலாகே அஜித்குமார ஜெயசுந்தர தேர்தல் கடமையில் இருந்தபோது மயங்கிவீழ்ந்தார். பருத்தித்துறை ஆதார வைத்திசாலைக்கு எடுத்து விரையப்பட்டபோதும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணை நடத்தி உடற்கூறாய்வுக்கு உத்தரவிட்டார். மாரடைப்பு ஏற்பட்டு அவர் உயிரிழந்தார் என்று உடற்கூறாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் அவரது சடலம் துணைவியாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## பருத்தித்துறையில் கரையொதுங்கிய பெண்ணின் சடலம்

பருத்தித்துறை மூர்க்கம் கடற்கரையில் இளங்குடும்பப் பெண் ஒருவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் கரை ஒதுங்கி உள்ளது.

சக்தி கோவிலடி தும்பளை கிழக்கை சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான, 36 வயதான பெண்ணின் சடலம் அதுவென பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

உயிரிழந்த பெண் தனது மகனுடன் தும்பளையில் வசித்து வந்தார். அவரது கணவன் வெளிநாட்டில் வேலை பார்க்கிறார். கடற்கரையில்பெண்ணின்சடலம்காணப்படுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

## பாலியல் குற்றச்சாட்டில் வேட்பாளர் கைது

பதினான்கு வயதுச் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் இந்த ஆண்டு பசறைப் பிரதேச சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பசறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பசறைப் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் ☞ 2

## வேட்பாளர் மீது துப்பாக்கிச் சூடு



களுத்துறை மாநகர சபையின் வேட்பாளர் பந்துல பிரசன்ன ☞ 2

# 10 ஆண்டு கால வேலை நிறுத்தங்களால் 300 மில்லியன் ரூபாய்க்கு மேல் நட்டம்

கடந்த பத்து ஆண்டுகளில் நாடு முழுவதும் நடந்த வேலைநிறுத்தங்கள் காரணமாக 300 மில்லியன் ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக சமீபத்திய புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றனன என்றுபேராதனைப்பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரல தெரிவித்தார்.

இந்தப் 10 ஆண்டுகளில் 386 வேலைநிறுத்தங்கள் நடந்ததாகவும், அந்த வேலைநிறுத்தங்களால் இலங்கை 662,388 வேலை நாட்களை இழந்ததாகவும் அவர் கூறினார்.

வேலைநிறுத்தங்களில் ஈடுபட்ட ஊழியர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து பதினைந்தாயிரத்து முந்நூற்று ஐம்பத்தாறு என்றும், 2018ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான வேலைநிறுத்தங்கள் நிகழ்ந்ததாகவும் வசந்தஅத்துக்கோரலாதெரிவித்தார். "அந்த ஆண்டு நடந்த வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை 51" என்று அவர் கூறினார்.

கல்வி, சுகாதாரம், தோட்டங்கள், போக்குவரத்து மற்றும் ஆடை போன்ற துறைகளில் அதிக எண்ணிக்கையிலான வேலைநிறுத்தங்கள் நடந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இலங்கையில்தற்போதுசெயல்படும்தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 2,122.

## சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் நால்வர் கைது

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே பல்கலைக்கழகத்தின் முதல்வருட மாணவன் ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதையே மாணவனின் தற்கொலைக்குக் காரணம் என்று அவரது பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்த நிலையில் முதல்கட்ட விசாரணைகளின் பின்னர் இந்த நால்வரும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

குற்றப் புலனாய்வுத் துறை (சிஐடி) இந்த நால்வரையும் கைது செய்தது. கைது செய்யப்பட்டவர்கள் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஜனாதிபதியும்எமதுகட்சியைச்சேர்ந்தவர்தான் என்று அதிகார மமதையை யாழ்ப்பாணத்தில் வெளிப்படுத்தியிருந்தார் அமைச்சர் சந்திரசேகரன். இதையெல்லாம் தமிழ் அரசுக் கட்சி செயலாளர் சுமந்திரன் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும் என்று சாரப்படவே அவரது எச்சரிக்கை அமைந்திருந்தது. அதன் பொருள் எம்மை எதிர்த்தால் இந்த அதிகாரங்களை எல்லாம் வைத்து உங்களை ஒரு வழியாக்கிவிடுவோம் என்பதுதான். இதைத்தான் அதிகார வெறி என்பது.

அமைச்சர் சந்திரசேகரனிடம் மட்டுமல்ல ஒட்டுமொத்த ஜேவிபி, என்பிபியிடமே இந்த மனோபாவம்தான் மேலோங்கி இருக்கிறது, அதிகார வெறி தலைவிரித்தாடுகின்றது என்பது அண்மையில் ஒரு சம்பவத்தின் மூலம் வெளிப்படையானது. மே 1 தொழிலாளர் தினத்தை கொழும்பில் பெருமெடுப்பில் நிகழ்த்தியது ஜேவிபி. அதுவும் கொழும்பு கோல்பேஸ் திடலில்தான் இந்தக் கூட்டத்தை நடத்தியது.

இங்கிருந்துதான் கோட்டாபயவுக்கு எதிரான போராட்டம் தொடங்கி, தொடர்ந்து கிளர்ச்சியானது. அதன் பின்னர் காலி முகத் திடலை அரசியல் நிகழ்வுகளுக்கு ஒதுக்குவதில்லை என்று ஒரு முடிவு எடுக்கப்பட்டது. போராட்டத்தால் காலி முகத் திடல் சேதமடைந்தது என்றும் அதனை மீளமைப்பதற்குப் பல மில்லியன் ரூபாய் செலவிடவேண்டியிருந்தது என்றும் காரணம் கூறப்பட்டது. அப்போது ஜேவிபி உட்பட எல்லாக் கட்சிகளும் அதனை ஏற்றுக்கொண்டன. ஆனால் அதிகார மமதை வந்ததும் அந்த முடிவைத் தூக்கி எறிந்த என்பிபி தனது மே தினம் அங்கேயே நடக்கும் என்று அறிவித்தது.

அதுமட்டுமல்ல இந்த மே தினத்திற்காக இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்த தமது ஆதரவாளர்கள், வேடிக்கை பார்ப்பவர்களை பேருந்துகளில் அழைத்து வந்திருந்தனர் என்பிபியினர். இப்படி அழைத்து வரப்பட்டவர்களை ஏற்றி வந்த பேருந்துகள் கூட்டம் முடிந்து திரும்பும் வழியில் அதிவே நெடுஞ்சாலையின் ஓரத்தில் நிறுத்தி ஓய்வெடுத்துள்ளனர். தெற்கு அதிகவே நெடுஞ்சாலையில் இந்த அராஜகம் நடந்துள்ளது.

அதிகவே நெடுஞ்சாலையில் வாகனங்கள் தமது வேகத்தைக் குறைக்கக்கூடாது என்பது விதிமுறை. விபத்து மற்றும் அவசர நேரங்களைத் தவிர்த்து அந்தச் சாலையில் வாகனங்கள் அனைத்துமே குறிப்பிட்ட வேகத்தில் தொடர்ந்து பயணித்துக்கொண்டே இருக்கவேண்டும். அப்படியிருக்க என்பிபி பேருந்து ஓட்டுனர்கள் தமது வாகனங்களை வீதியின் ஓரத்தில் நிறுத்தி ஓய்வெடுத்ததுடன் அழைத்து வந்தவர்களும் வீதிகளில் இறங்கி ஓய்வெடுக்கவும் அனுமதித்துள்ளனர். இதை ஓட்டுனர்கள் தன்னிச்சையாகச் செய்யவில்லை. என்பிபி கட்சியினரின் ஆலோசனை, வழிகாட்டல் என்பவற்றின் அடிப்படையில்தான் மேற்கொண்டுள்ளனர்.

'அப்பே ரட்ட, அப்பே ராஜ்ஜிய' என்கிற போதை தலைகேறியதன் விளைவாகவே என்பிபியினர் இப்படி நடந்துகொண்டனர். இந்தப் பிரச்சினை தெற்கில் பூதாகரமாக வெடித்ததாலும் ஊடகங்கள் அங்கு இதனைத் தூக்கிப்பிடித்ததாலும், ஒன்றும் செய்ய முடியாத ஜனாதிபதி, தனது அதிகார போதையில் செய்த துஸ்பிரயோகத்தை மூடிமறைக்க முடியாத ஜனாதிபதி கடைசியில் அவை தவறுதான் என்று ஒப்புக்கொள்ள வேண்டியவரானார்.

வியட்நாம் புறப்படுவதற்கு முன்பாக, தேசிய மக்கள் சக்தியின் மே தின பேரணியில் கலந்து கொண்டு திரும்பும் வழியில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பேருந்துகளை நிறுத்திய ஓட்டுநர்கள், அதற்கு வசதி செய்த குழுக்கள் மற்றும் சம்பவத்தை வேடிக்கை பார்த்த பொலிஸார் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய கட்சி செயற்பாட்டாளர்கள் மீது கட்சிக்குள்ளேயே நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

'இதற்குப்பொறுப்பானவர்களின்பட்டியலை நான்கேட்டுள்ளேன். ஒவ்வொரு பேருந்திற்கும் ஒரு ஏற்பாடு செய்யும் சகோதரர் இருக்கிறார். ஏனென்றால் இது நடக்கக்கூடாத ஒன்று. நாட்டில் ஒரு பொதுவான சட்டம் உள்ளது,' என்று ஜனாதிபதி கூறினார்.

தொலைக்காட்சி ஒன்றில் அரசியல் கலந்துரையாடலின் போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

'மே பேரணிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் குழு தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஒரு இடத்தில் இறங்கி, அதிவேக நெடுஞ்சாலையில் போக்குவரத்து விதிகளை அப்பட்டமாக மீறுவதை நாங்கள் கண்டோம். அதைக் காவல்துறையினர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆளும்தரப்புப் பேரணிக்கு வந்த மக்கள் குழு என்பதால் காவல்துறை எதுவும் செய்யவில்லையா? அல்லது வந்தவர்களிடம் வேறு ஏதேனும் சட்டங்கள் உள்ளதா? பேசப்பட்ட அமைப்பு மாற்றம் எங்கே?' என்று பத்திரிகையாளர் ஜனாதிபதியிடம் கேட்டார்.

இதற்கு என்ன பதில் சொல்ல முடியும் அநுரவால், அதனால், அது தவறு என்று ஒத்துக்கொண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார். எனினும் விதிகளை மீறியதற்காக கடந்த இரண்டு நாள்களில் எந்தவொரு பேருந்துச் சாரதியும், என்பிபி ஏற்பாட்டாளரும் கைதுசெய்யப்பட்டனர் என்று தகவல் இல்லை.

'இந்தப் பிரச்சினை எழுந்த விதத்தைப் பார்த்தேன். நான் இதை நியாயப்படுத்தவில்லை. இந்த மக்கள் தூரத்திலிருந்து வரும் ஒரு குழு. இந்த மக்கள் தெற்கிலிருந்து வந்திருக்க வேண்டும். நான் இதை விசாரித்தேன். நான் மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனராகலை, பதுளை மற்றும் அம்பாறை ஆகிய இடங்களுக்குப் பேசினேன். அந்தப் பேருந்துகளில் யார் இருந்தார்கள் என்று சொல்லச் சொன்னேன்? அவற்றின் ஏற்பாட்டாளர் யார்? என்பதை எனக்குத் தெரிவிக்கச் சொல்லியுள்ளேன்.

அந்த சம்பவம் அதிவேக நெடுஞ்சாலையில் நடந்தது. அவர்கள் நிறுத்தியது ஒரு நிறுத்துமிடத்தில்தான். அங்கே ஒரு குறிப்பிட்ட அளவு இடமே இருக்கிறது. அந்த இடம் போதாதபோது, மக்கள் உள்ளே சிக்கிக் கொள்கிறார்கள். அந்த நடவடிக்கை தவறானது. காவல்துறை பார்த்திருக்க அந்த சம்பவம் நடக்க அனுமதித்திருந்தால், அதுவும் தவறு. அதற்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

சம்பவத்தை நேரில் பார்த்த பொலிஸார் மீதும், பேருந்தை அங்கே நிறுத்திய ஓட்டுநர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும், மறுபுறம் அதற்கு உதவிய குழுக்கள் ஏதேனும் இருந்தால், அவர்களும் பொறுப்பேற்கவேண்டும். சட்டம் அமல்படுத்தப்படவேண்டும். கட்சிக்குள் இருந்து அதில் ஈடுபட்ட திசைகாட்டியின் கட்சி ஆர்வலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நான் அவர்களின் பட்டியலைக் கேட்டுள்ளேன். ஒவ்வொரு பேருந்திற்கும் ஒரு ஒழுங்கமைக்கும் சகோதரர் இருக்கிறார். இது நடக்கக்கூடாத ஒன்று. நாட்டில் ஒரு பொதுவான சட்டம் உள்ளது" என்று ஜனாதிபதி பதிலளித்தார்.

அவர் என்னதான் சமாளித்தாலும் எங்களிடம் ஆட்சி அதிகாரம் இருக்கிறது, மூன்றிலிரண்டு பெரும்பான்மை உள்ள நாடாளுமன்றம் இருக்கிறது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி இருக்கிறார் அதனால் நாங்கள் நினைத்தைச் செய்வோம், எதைவேண்டுமானாலும் செய்வோம் என்கிற அமைச்சர் சந்திரசேகரனின் மனோநிலைதான் இலங்கை முழுவதும் விரவிக் கிடக்கிறது. "இதற்குத் தானா ஆசைப்பட்டீர் இலங்கை மக்காள்!"

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜிஎஸ்பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் ஐவரும், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைத் தூதுவரும், பிரதித் தூதுவரும் நேற்றைய சந்திப்பில் பங்குபற்றினர்.

கொழும்பு, புல்லர்ஸ் வீதியில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இலங்கைக்குத் தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்பட்டுவரும் விசேட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை அடுத்த ஆண்டில் முடிவடைய இருக்கும் சூழலில், அது குறித்து ஆராய்வதற்காகவே இந்தக் குழுவினர் இலங்கைக்கு வந்துள்ளனர். அவர்கள் ஏற்கனவே ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினர். ஆளும்தரப்பின் முக்கிய அமைச்சர்கள், எதிர்க் கட்சியினரையும் அவர்கள் சந்தித்துப் பேச்சு நடத்துகின்றனர்.

ஜிஎஸ்பி வரிச் சலுகையைப் பெறுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் சில நியமங்களை, நிபந்தனைகளை வைத்துள்ளது. குறிப்பாக மனித உரிமைகள் சார்ந்த தர நியமங்களை இந்தச் சலுகையைப் பெறும் நாடுகள் பூர்த்தி செய்திருக்கவேண்டும். அந்தத் தர நியமங்களைப் பூர்த்தி செய்வோம் என்று வாக்குறுதியளித்தே இலங்கை ஏற்கனவே இந்தச் சலுகையைப் பெற்று வருகிறது. ஆனால், மனித உரிமை நிலமைகளை மேம்படுத்துவதிலும் பொறுப்புக்கூறுவதிலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதிலும் அது வாக்குறுதியளித்தபடி நடந்துகொள்ளவில்லை. இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியக் குழு மீண்டும் கொழும்பு வந்துள்ளது.

தமிழ் அரசுக் கட்சியுடன் ஒன்றியத்தினர் நேற்று நடத்திய சந்திப்புக் குறித்து கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

இலங்கை மக்கள் என்ற முறையில், பொருளாதார ரீதியில் நாட்டை மேம்படுத்தும் நோக்கில் நாட்டுக்கான வரிச் சலுகைகளைத் தொடர்ந்து வழங்கப்படுவதை நாம் எதிர்த்ததில்லை. அதனடிப்படையில் அந்த வரிச் சலுகைகளை இலங்கை அரசுகள் பெற்றுக்கொண்டபோதிலும், கடைசியில் நாட்டைப் பொருளாதார வங்குரோத்திலேயே கொண்டு போய் நிறுத்தியுள்ளன. மறுபுறத்தில் இந்த வரிச் சலுகையைப் பெறுவதற்கான நிபந்தனைகளையும் அரசு நிறைவேற்றவில்லை.

தொடர்ந்து இவ்வாறு அரசு முறையற்ற விதத்தில் - பொறுப்பற்றுச் செயற்படும்போது வரிச்சலுகையைத் தொடர்ந்து வழங்குங்கள் என்று நாம் கோருவது நியாயமற்றது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவது, பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்துவது, அதிகாரங்களை நீதி, நியாயமான முறையில் பகிர்வது, நல்லாட்சியைப் பேணுவது ஆகியவை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சர்வதேசத்துக்கும் தான் வழங்கிய உறுதிமொழிகளைத் தொடர்ந்து அரசு நிறைவேற்றவில்லை. உதாசீனப்படுத்தி வருகின்றது. இப்படி ஏமாற்றுகரமான முறையில் இலங்கை அரசு தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது.

இலங்கை ஆட்சிப் பீடம் உங்களிடம் உதவி பெற்றுக்கொண்டு, மறுபக்கத்தில் நீதி செய்ய வேண்டிய தமிழர்களுக்கு அதைச் செய்ய மறுக்கின்றது. ஒருபுறம் ஐரோப்பிய ஒன்றிய வரிச்சலுகை வருமானத்தைப் பயன்படுத்திக் கொண்டு, மறுபுறம் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் காணிகள் அரசுடமையாக்கப்படும் வேலைகள் முனைப்பாக முன்னெடுக்கின்றன. அதிகாரப் பகிர்வை முன்னெடுக்க மறுக்கின்றது. பொறுப்புக் கூறலை நிலைநாட்டப் பின்னடிக்கின்றது.

நீதியையும், நல்லாட்சியையும், மனித உரிமைகளையும் நிலைநாட்டும் தனது கடப்பாட்டை இலங்கை நிறைவு செய்வதற்கான நிபந்தனைகளைக் காலம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கவேண்டும். அந்த நிபந்தனைகளை இலங்கை அரசு நிறைவேற்றத் தவறினால் வரிச் சலுகையை விலக்கிக் கொள்வதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அப்படியான நடவடிக்கையை நாங்கள் வரவேற்போம்- என்று தெரிவித்திருக்கிறோம் - என்றார்.

தமிழருக்கு நீதி வழங்கப்படவேண்டும், அதிகாரம் முறையான விதத்தில் பகிரப்பட வேண்டும் என்பவை தொடர்பில் இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் கடும் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் தமிழ் அரசுக் கட்சியினர் வலியுறுத்தியுள்ளனர்.

## வேட்பாளர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கியால் சுடப்பட்டதில் காயமடைந்தார். அடையாளம் தெரியாத ஒருவர் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பினார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

களுத்துறை, நாகொட கம் சபா வீதியில் உள்ள ஒரு வீட்டின் முன் இந்தச் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வேட்பாளரைச் சுட்டுவிட்டுத் தப்பியோடி உள்ளனர். குற்றவாளிகள் களுத்துறை-பொம்புவல சாலையை நோக்கி தப்பிச் சென்றனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காயமடைந்த வேட்பாளர் களுத்துறையில் உள்ள நாகொட போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## பாப்பரசரான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கடுமையாக விமர்சிக்கப்படுகிறார்.

இந்தப் புகைப்படம் வெள்ளை மாளிகை ஊழியர்களின் சமூக ஊடகக் கணக்குகளில் பதிவேற்றப்பட்டது.

புனித திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவுக்குப் பிறகு புதிய திருத்தந்தை தேர்ந்தெடுக்கப்பட உள்ள நிலையில் இந்தப் படம் வெளிவந்திருப்பது தீவிர கத்தோலிக்கர்களைச் சினமூட்டியுள்ளது. மே 7 கார்டினல்களின் வாக்கெடுப்பு மூலம் புதிய திருத்தந்தை தெரிவுசெய்யப்படுவார் என்று வத்திக்கான் உறுதிப்படுத்தியுள்ளது.

இத்தகைய சூழலில், அமெரிக்க அதிபர் டிரம்பின் ஆதரவாளர்கள் குழு ஒன்று இந்த புகைப்படத்தை உருவாக்கி, அவர் போப் பதவிக்கு பொருத்தமானவர் என்ற குறிப்புடன் வெளியிட்டதாகக் கூறப்படுகிறது.

பாப்பரசருக்கு அவமானத்தை ஏற்படுத்தும் வகையில் இந்தப் புகைப்படத்தை சமூக ஊடகங்களில் பகிரங்கப்படுத்தியுள்ளார் என்று டிரம்ப் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தப் புகைப்படம், டொனால்ட் டிரம்ப் தான் பாப்பரசராக விரும்புவதாக வெளியிட்ட பொது அறிக்கையின் அடிப்படையில், டிரம்ப் ஆதரவாளர்களால் உருவாக்கப்பட்டது.

## வெளிநாடுகளுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல கடுமையான குற்றங்களுக்காகத் தேடப்படும் லோகு பட்டி, சமீபத்தில் பெலாரஸில் அதன் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டார். விசாரணைகளில் அவர் வெளிநாட்டிலிருந்து குற்றங்களை ஒருங்கிணைத்தார் என்று தெரியவந்துள்ளது,

- 23 கிராம் ஹெரோயின் வைத்திருந்தல் மற்றும் கடத்தல் குற்றங்களுக்கா- களுத்துறை உயர் நீதிமன்றத்தில் (2016.05.21, வெலிபென்ன காவல் பிரிவில்) அவர் மீது வழக்கு இருக்கிறது.
- துப்பாக்கிச் சூடு மற்றும் கடுமையான காயம் ஏற்படுத்தியது தொடர்பாக - கெஸ்பேவ நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது (2017.05.09, பிலியந்தலை).
- 299 கிராம் ஹெராயின் வைத்திருந்தது மற்றும் கடத்தியது தொடர்பாக- களுத்துறை உயர் நீதிமன்றத்தில் விசாரணை (2017.06.15) நடந்து வருகிறது.
- வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கையெறி குண்டு, ரிவால்வர் மற்றும் வெடிமருந்துகளை வைத்திருந்தது தொடர்பாக- மதுகம நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. (2021.10.08, வெலிபென்ன).
- ஒருவரைச் சுட்டுக் காயப்படுத்துதல் (2022.08.24, அஹுங்கல்ல).
- ஒருவரைச் சுட்டுக் கொன்றது (2022.09.23, அஹுங்கல்ல).
- வீ-56 தாக்குதல் துப்பாக்கியைப் பயன்படுத்தி கொலை செய்தல் (2022.10.12, அஹுங்கல்ல).
- மீன் வியாபாரி ஒருவரைக் கொலை செய்யச்செல்லும் வழியில் துப்பாக்கியுடன் ஒரு சந்தேக நபரைக் கைது செய்தல் (2024.01.18, அம்பலாங்கொடை).
- வீ-56 துப்பாக்கியால் இரட்டைக்கொலை மற்றும் நான்கு பேரைக் காயப்படுத்துதல் (2024.07.08, அதுருகிரிய). ஆகிய குற்றங்களின் பின்னாலும் இவரே இருந்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## சப்ரகமுவ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிசார் தெரிவிக்கின்றனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் துன்புறுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணை குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதிய மாணவர் துன்புறுத்தல் சம்பவம் தொடர்பாக கடந்த 29 ஆம் திகதி சமனலவேவ காவல் நிலையத்தில் கிடைத்த புகாரைத் தொடர்ந்து, புதிய மாணவர் துன்புறுத்தலுக்கு ஆளான சபரகமுவ பல்கலைக்கழக மாணவர்களில் 20 பேரிடமிருந்து வாக்குமூலங்களைப் பெற காவல் நிலையம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடவடிக்கை எடுத்தது.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் இன்று பலாங்கொடை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## பாலியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் பசறைப் பகுதியைச் சேர்ந்தவர், முப்பத்து நான்கு வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் மக்களின் தங்க நகைகளை அரசுடைமையாக்காது உரிய முறையில் அவர்களிடமே ஒப்படைக்கவேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி கோரிக்கை

எமது மக்களின் முதலீடாகவும் அவர்களின் கலாசார அடையாளமாகவும் காணப்படும் தங்க நகைகளை அரசுடைமையாக்காது உரியவர்களிடமே ஒப்படைக்க தற்போதைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்எனவன்னிநாடாளுமன்றஉறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் வசமிருந்த தமிழ் மக்களின் பெருந்தொகையான நகைகள் தற்போது பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு மத்திய வங்கியால் குறித்த நகைகள் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்து தெரிவித்து நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

மனிதாபிமான யுத்தம் என்ற போர்வையில் மக்களைக் கொன்று குவித்து அவர்களின் கலாசார அடையாளமாகப் பேணப்பட்டுவந்த சொத்துக்களை இல்லாமல் செய்து தமிழ் மக்களை நிர்க்கதியாக்கிய பேரினவாத சிந்தனை கொண்ட அரசுகள் தமிழ் மக்களின் பெருந்தொகையான நகைகளை மறைத்து வைத்திருப்பது தொடர்பில் இதுவரை எவ்விதமான கருத்துகளையும் வெளியிடாமல் இருந்திருக்கின்றது.

இந்த நிலையில் நகைகளை வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள வங்கிகளில் அடகு வைத்த மக்கள் தமது நகைகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் தமது முதலீடுகள் அனைத்தையும் இழந்திருப்பதனால் பெரும் வறுமையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இவ்வாறான நிலைமையில் தற்போதைய அரசு தேர்தல் நலனுக்கானதாக இருந்தாலும் அந்த நகைகள் தொடர்பில் தகவல்களை வெளிக்கொணர்ந்து அதனை வெளிப்படுத்தியமையை வரவேற்கின்றேன்.

எனினும் குறித்த நகைகளை உரியவர்கள் இல்லை என்ற காரணங்களை காட்டி அரசுடைமையாக்காது நகைகளுக்கு உரித்தான தமிழ் மக்களிடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை பொதுமக்களும் தங்களிடம் குறித்த நகைகளை அடகு வைத்த பற்றுச்சீட்டுக்கள் இருக்கும் பட்சத்தில் அதனை வெளிப்படுத்தி தமது நகைகளை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்வதற்கும் முன் வர வேண்டும்.

பற்றறுச்சீட்டுக்கள் உள்ளவர்கள் அதன் பிரதிகளை என்னிடம் வழங்கும் பட்சத்தில் நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று உரியவர்கள் இந்த நகைகளை பெறுவதற்கு ஏற்பாடுகளை செய்து கொடுக்க முடியும்.

அத்துடன் அரசாங்கமானது வங்கிகளில் அடகு வைத்த பற்றுச் சீட்டுக்கள் பல பொது மக்களிடம் இல்லாத நிலை தற்போது காணப்படுகின்றது. அது மாத்திரமன்றி அடகு வைத்த பலர் இன்று இயற்கை எய்தியும் உள்ளமையால் அவை தொடர்பில் ஏதுவான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

எனவே அவை தொடர்பில்உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த நகைகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமே தவிர நகைகளை அரசுடைமையாக்கி தமிழ் மக்களின் சொத்துக்களை கபளீகரம் செய்யக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

100

# சித்த ஆயுர்வேத ஒருங்கிணைந்த வைத்திய நிலையம் திறந்துவைப்பு

(றமீஸ்)

திருக்கோவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட தம்பட்டை பகுதியில் முற்று முழுதான இயற்கை வளங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள நிம்பா சித்த ஆயுர்வேத ஒருங்கிணைந்த வைத்திய நிலையம் சனிக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.





வைத்திய நிலையத் தின் ஸ்தாபகர் எஸ்.விக்னேஸ் வரமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ் வின்போது தம்பட்டை தபோவனம் ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தா ஜி மகராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஒன்றிணைந்த வைத்திய நிலையத் தினை திறந்து வைத்தார்.

இவ்வைத்திய நிலையத்தில் இலங்கை, இந்தியா, சீனா போன்ற நாடுகளில் பிரபல்யம் பெற்று காணப்படும் இயற்கை வைத்திய முறைகளில் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கையிலும் பல்வேறு வெளிநாடுகளிலும் பிரசித்தி பெற்று விளங்கும் பல நூற்றுக்கணக்கான இயற்கை மூலிகைகள், தாவரங்கள் போன்றனநடப்பட்டுஇதன்மூலமாக மக்களுக்கு பக்க விளைவுகளற்ற சிகிச்சைகள் அளிக்கப்படவுள்ளன.

குறிப்பாக சித்த ஆயுர்வேத வைத்தியம், யுனானி போன்ற வைத்திய சிகிச்சைகள் இங்கு வழங்கப்படவுள்ளன. அண்மைக் காலமாக குழந்தைகளை தாக்கி வரும் ஒட்டிசியம் எனும் நோயின் மூலம் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளதோடு, இந்நோயிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் விஷேட வேலைத் திட்டங்களும்இச்சிகிச்சைநிலையத்தின் மூலம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய சூழ்நிலையில் மக்கள் மத்தியில் உயிர் அச்சுறுத்தல்களை உண்டு பண்ணி வரும் தொற்று நோய் மற்றும் தொற்றா நோய் போன்றவற்றிலிருந்து மக்களைப் பாதுகாத்து பக்க விளைவுகளற்ற முறையில் சிகிச்சை வழங்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சிகிச்சை நிலையத்தில் கிடைக்கும் வருமானத்தினைக் கொண்டு, வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி நடவடிக் கைகளுக்கு பயன்படுத்தப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது.



# கிண்ணியாவில் பல்கலைக் கழகத்திற்கு தெரிவான மாணவிகளுக்கு கௌரவிப்பு

(ஹலால்தீன்)

கிண்ணியா ரீ.பி.ஜாயா மகளிர் மகா வித்தியாலயத்தில் இருந்து, பல்கலைக்கழகத் துக்குதெரிவுசெய்யப் பட்ட மாணவிகளுக் கான கௌரவிப்பு நிகழ்வு வெள்ளிக் கிழமை நடை பெற்றது.



பாடசாலை அதிபர் எஸ். ரீ. நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அண்மையில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சை பெறுபேறு படி, பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மூன்று மாணவிகளும் கற்பித்த ஆசிரியர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

ஹபீபுல்லா பாத்திமா ரிஸ்லா, நியாஸ் பாத்திமா நிஸ்பா மற்றும் சலீம் சல்மா ஆகிய மாணவிகளே கௌரவிக்கப்பட்டனர்.

இந்த மாணவிகளுக்கு கற்பித்த ஆசிரியர்கள், அவர்களின் இந்த சாதனைக்கு, பல்வேறு வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் புரிந்த ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் உட்பட அனைவருக்கும் தனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் அதிபர் இதன் போது தெரிவித்தார்.

# முதலுதவி பயிற்சி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ்

(பர்ஸான்)

ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலயத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுவெள்ளிக்கிழமைஇடம்பெற்றது.

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி பயிற்சி பெற்ற மாணவிகளுக்கே சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலைஅதிபர்ஏ.எல்.எம்.அஸ்ஹர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.ஜவாத் கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.எம்.தாஹிர், மட்டக்களப்பு மத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.அபுல்ஹஸன், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட ஆணையாளரும், தேசிய பயிற்றுவிப்பாளரும், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலக சிறுவர் விளையாட்டு இணைப்பாளருமான எஸ்.எல்.எச்.எம். இனாமுல்லாஹ், வாழைச்சேனை பொலிஸ் நிலைய சிறுவர், மகளிர் விவகார பொலிஸ் பொறுப்பதிகாரி திருமதி ஐ.பி.நிலாந்தி ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பகிடி வதை எனும் இருண்ட நிழல்

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பகிடிவதை (ஷழிஆஆஷ்ஐஆ) என்பது பல ஆண்டுகளாகவே ஒரு தீவிரமான சமூகக் கொடுமையாகத் தொடர்ந்து வருகிறது. இது மாணவர்களின் உயிரையும் எதிர்காலத்தையும் பறிக்கும் நிலைக்குச் சென்று பல காலமாகிவிட்டது. அதன் விளைவாக பகிடி வதையைக் கட்டுப்படுத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டபோதும் இலங்கையின் வழக்கத்திற்கு அமைய அவை தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது சமீபத்திய சம்பவங்கள் மூலம் நிரூபிக்கப்படுகின்றது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றுவரும் மாணவன் ஒருவர் பகிடிவதை காரணமாக தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்படும் சம்பவம் நாட்டெங்கும் அதிர்ச்சியையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து காவல்துறையினர் விசாரணை முன்னெடுத்து வருகின்றனர். கம்போலாவின் இஹலகம பகுதியில் வசித்து வந்த தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் பீடத்தின் இரண்டாம் ஆண்டு மாணவரான சரித் தில்ஷான் (வயது 23), பல்கலைக்கழகத்தில் பகிடி வதைக்கு உள்ளானதைத் தாங்க முடியாமல், சித்திரை 29 தனது வீட்டின் பின்னால் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

மாணவரின் குடும்பத்தினரின் கூற்றுப்படி, இவர் பல மாதங்களாகவே மூளைக்கும் மனதிற்கும் பீடையளிக்கும் வகையில் ஒரு குழுவால் தொடர்ந்து பகிடிவதைக்கு ஆளாக்கப்பட்டு வந்துள்ளார் என்று கூறப்படுகிறது.

மொறட்டுவ பல்கலைக்கழக மாணவரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வரப்பிரகாஸ் பகிடிவதை காரணமாகவே உயிரிழந்தமையுடன் பகிடி வதை தொடர்பான சமூகத்தின் கவனம் பெருமளவில் ஈர்க்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பகிடிவதையை நிறுத்துவதற்கான சட்டங்கள் இறுக்கப்படவேண்டும் என்கிற சமூக அக்கறை வலுத்தது. இதன் விளைவாகச் சில சட்டங்கள் இயற்றப்பட்டன. பல்கலைக்கழகங்கள் சுதந்திரமான கல்வி சூழலை உருவாக்கவேண்டிய இடங்களாக இருக்க வேண்டியது போல், இங்கு புதிய மாணவர்கள் மரியாதையுடன், நிம்மதியாகக் கல்வி பயிலத் தேவையான பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது.

பகிடிவதை தொடர்பான பல்வேறு விசாரணைகள், மன்றங்கள், சட்டரீதியான நடவடிக்கைகள் இன்றுவரை எடுக்கப்பட்டாலும், பல்கலைக்கழக நிர்வாகங்களின் குறைந்த உந்துதலும், அரசின் தெளிவற்ற கட்டுப்பாடுகளும் காரணமாக, முழுமையாக அவை நிலைநாட்டப்படவில்லை. உண்மையில், பகிடிவதையின் பெயரில் நிகழும் வன்முறைகள், பாலியல் வன்முறை, மத வேறுபாடு சார்ந்த அழுத்தங்கள், மற்றும் தவறான, சமூகப் பிறழ்வான மரபுகளை கட்டாயப்படுத்துதல் என்பன மாணவர்களை உளவியல் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன. பின்னர் அவர்களே அவற்றைத் தொடரவும் விரும்புகிறார்கள்.

இதனை முற்றிலும் ஒழிக்க வேண்டுமானால், பல்கலைக்கழகங்களுக்கு உள்ளே ஒரு தனி பகிடிவதை தடுப்பு பிரிவு செயல்படவேண்டும். மாணவர்களுக்கிடையே விழிப்புணர்வையும், வலிமையான நம்பிக்கையையும் ஏற்படுத்தும் வகையில் வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் நடைமுறையில் வரவேண்டும். குற்றவாளிகள் மீது கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால்தான், இது எதிர்காலத்தில் மீண்டும் நடைபெறாது என்பதற்கான நம்பிக்கையை வழங்க முடியும்.

புதிய தலைமுறை மாணவர்கள் உயிரிழக்காமல் இருக்க, பகிடிவதை ஒழிக்க போராடும் நேரம் இது!

# ஆஸி பிரதமராக மீண்டும் அல்பானீஸ் எதிர்கட்சி தலைவர் டட்டன் தோல்வி!

## தமிழ் பெண் அஷ்வினி பெரு வெற்றி !

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

அவுஸ்திரேலியாவில் கடந்த ஐந்து வார தேர்தல் பிரச்சாரத்தின் போது எதிர்கட்சி தலைவர் பீட்டர் டட்டனை விட சிறப்பாக செயல்பட்ட பிரதமரின் ஆளும் கட்சி இத் தேர்தலில் வெற்றி பெற அதிக வாய்ப்புள்ளதாக கருத்து கணிப்புகள் முன்பே தெரிவித்தன.

அதற்கேற்ப தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, பெரும்பான்மை அரசாங்கத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் அந்தோணி அல்பானீஸ் தலைமையில் இரண்டாவது முறையாக அரசை அமைக்கவுள்ளது.

இரண்டாவது தவணையில் ஆளும் கட்சி அதிக ஆசனங்களுடன் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவது வெகு அரிது. எனினும் கனடாவை போல, தற்போது அவுஸ்திரேலிய ஆளும் கட்சி பிரதமர்

இதை சாத்தியமாக்கியிருக்கிறார்.




### அந்தோணி அல்பானீஸ் ஆட்சி:

சில மாதங்களுக்கு முன்பு நடந்த கருத்துக் கணிப்புகளில் முன்னணியில் இருந்த எதிர் கட்சி கூட்டணி, பொருளாதர கொள்கை குழப்பம், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்புடனான ஒப்பீடுகள் மற்றும் முன்மொழியப்பட்ட பிதிய அணு உலைகள் உருவாக்கம்,

மருத்துவக் காப்பீட்டை நீக்கும் திட்டம் ஆகியவற்றுக்கு மத்தியில் ஆதரவில் பாரிய சரிவை சந்தித்தது.

தற்போது 62 வயதான அந்தோணி அல்பானீஸ், டிரம்பின் வரிவிதிப்புப் போரால் உலகளாவிய கொந்தளிப்பான காலகட்டத்தில் அவுஸ்திரேலியாவை வழிநடத்த ஒரு நிலையான தலைவராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார்.

தேர்தல் முடிவின் பின்னர் வாக்கு எண்ணிக்கை தொடர்ந்தபோது, தொழிற்கட்சி மேம்பட்ட பெரும்பான்மையைப் பெற்றது. 2004 இல் ஜோன் ஹோவர்டுக்குப்(John Howard) பிறகு இரண்டாவது முறையாக வெற்றி பெற்ற முதல் பிரதமராக அந்தோணி அல்பானீஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவுஸ்திரேலிய மக்கள் மதிப்புகள், நியாயம், விருப்பம் மற்றும் அனைவருக்கும் வாய்ப்புக்காக வாக்களித்துள்ளனர், என்று அல்பானீஸ் சிட்னியின் உள்மேற்கில் உள்ள கேண்டர்பரி-ஹர்ல்ஸ்டோன் பார்க் ஆர்எஸ்எல் கிளப்பில் ஆரவாரமான தேர்தல் வெற்றி ஆதரவாளர்கள் கூட்டத்தில் கூறினார்.

அவுஸ்திரேலியர்கள் தங்கள் சொந்த வழியில் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளத் தேர்ந்தெடுத்துள்ளனர். எதிர் காலத்திற்காக நீட்டை கட்டியெழுப்பும் போது ஒருவருக்கொருவர் கவனித்துக் கொள்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.


இறுதியான முடிவுகளின் நிலவரப்படி, 88 இடங்களில் தொழிற்கட்சி வெற்றி பெற்று ஒரு தெளிவான பெரும்பான்மை அரசை உருவாக்கி உள்ளது. எதிர்கட்சி

கூட்டணி 37 இடங்களை கைப்பற்றி உள்ளது. கடந்த தேர்தலை விட 18 இடங்களின் மிகப்பெரிய சரிவை சந்தித்துள்ளது.

### தமிழ் பெண் வெற்றி :

இந்த பாராளுமன்ற தேர்தலில் அஷ்வினி எனும் தமிழ் பெண் பெரு வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அஷ்வினி அம்பிகைபாகர் (Ash Ambihaipegar), ஈழத்தில் புகழ் பெற்ற, குழ்ந்தை கவிஞர் அம்பி அம்பிகைபாகர் அவர்களின் பேத்தி ஆவார். சிட்னியில் உள்ள பார்ட்டன் (யழிஷமிலிஐ) தொகுதியி0ல் தொழிற் கட்சி சார்பில் போட்டியிட்டு வென்றுள்ளார்.

அத்துடன் 66 சதவீதத்துக்கு மேல்




வாக்குகள் பெற்று வெற்றியீட்டி அவுஸ்திரேலிய பாராளுமன்றம் செல்கிறார். வெற்றியீட்டியிருக்கும் தமிழ்ப் பெண்ணான அஷ்வினி அம்பிகைபாகர் உலகத்தமிழருக்குப் பெருமை சேர்ப்பவராக அமைகிறார். 2022 இல் கோர்ஜெஸ் றிவர் கவுன்சிலராகத் தெரிவாகியிருந்த அவர் ஒரு சட்ட நிபுணராகவும் பயிற்றப்பட்டவர்.

கடந்த பாராளுமன்றில் ஆட்சியில்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ஆஸி பிரதமராக...

4ம் பக்கத் தொடர்ச்சி..........

இருக்கும் தொழிற் கட்சி தேர்தலுக்கு முன் 77 ஆசனங்களும் , எதிர்க்கட்சி 53 ஆசனங்களையும் கொண்டிருந்தது. ஆனால் தற்போதய தேர்தலில் எதிர்க்கட்சி பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. குடிவரவுக் கொள்கையில் மாற்றம்,

அகதிகள் விரோத நடவடிக்கையே எதிர்கட்சியின் தோல்விக்கு முக்கியகாரணம்என்றும்குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

### எதிர்கட்சி தலைவர் படுதோல்வி:

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனது தொகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன் படு தோல்வி அடைந்துள்ளார். 2001 ஆம் ஆண்டு முதல் டிக்சன் தொகுதியை (ம்ஷ்உவவிலிஜ) தக்க வைத்துவந்த பீட்டர் டட்டன், இம்முறை அத்தொகுதியில் மண்கவ்வியுள்ளார். அத்துடன் லிபரல் கூட்டணிக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு தான் பொறுப்பேற்பதாகவும் பீட்டர் டட்டன் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கட்சியான லிபரல் கட்சியின் (Liberal Party)



தலைவர்பீட்டர்டட்டனின்சிலதிட்டங்கள், அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகத்தில் இடம்பெற்றிருக்கும் எலான் மாஸ்க்கின் அரசாங்க திறன் துறையின் செயல்பாடுகளோடு ஒத்துப் போவது போன்று இருப்பதாக மக்களிடையே எதிர்ப்பு கிளம்பியது. இதனால் இத் தேர்தலில் அவருக்கான ஆதரவு குறைந்தது என்றும் கூறப்படுகிறது.

அத்துடன் பீட்டர் டட்டன் அமெரிக்க டிறம்பின் கொள்கைகளைப் பிரதிபலித்ததோடு தீவிர வலதுசாரிக் கொள்கைகளை முன்வைத்து டிறம்பின் வடிவில் பிரசாரம் செய்துவந்தார். இதனால் அவர் “DOGE-y Dutton” என ஊடகங்களில் நையாண்டி செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முக்கியமாக அரசு ஊழியர்கள் முழு நேர வேலைக்கு அலுவலகத்திற்கு திரும்ப வேண்டும். பொதுத்துறை ஊழியர்கள் 10 ஆயிரம் பேர் வேலையிழக்கும் திட்டம் ஆகியவை கடும் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டதால், அதனை டட்டன் கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டார்.

இத்தேர்தலில் எதிர்க்கட்சியும் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டாலும் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் பெரும் போட்டி நிலவியது.

அவுஸ்திரேலிய வரலாற்றில் இதுவரை எந்தவொரு எதிர்க்கட்சி தலைவரும் தாம் போட்டியிட்ட தேர்தலில் தோல்வியே அடைந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்போது அந்த வரலாறு மக்களின் தீர்ப்பால் மாற்றப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சி தலைவர் பீட்டர் டட்டன், இந்தத் தேர்தலில் தோல்வியை ஒப்புக் கொண்டிருப்பதுடன், தாம் போட்டியிட்ட டிக்சனில் ஆளுங்கட்சி வேட்பாளர் அலி பிரான்சிடம் படு தோல்வி அடைந்துள்ளார்.

தேர்தல்தோல்விக்குதாமேமுழு பொறுப்பேற்றுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இந்த தோல்வியானது நாம் யார் என்பதை தீர்மானித்து விடாது என்று தனது கட்சிக்காரர்களுக்கு ஊக்கமளிக்கும் விதமாக அவர் பேசியுள்ளார்.

தொழிலாளர் கட்சிக்கு இதுவொரு வரலாற்று வெற்றி, இதனை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்றும் அவர் மனதாரப் பாரட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மீண்டும் லேபர் அரசு :

கடந்த ஜனவரியில் டட்டனின் லிபரல் கட்சி கூட்டணி ஆறு வீதம் முன்னிலையில் இருந்தது.



தற்போது ஏப்ரல் மாத தொடக்கத்தில் பிரதமரின் ஆளும் கட்சி ஒன்பது வீதம் அதிகரித்து கருத்துக்கணிப்பில் முன்னிலை பெற்று தற்போது இரண்டாவது முறையாக ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு மேயில் அவுஸ்திரெலிய பிரதமராகப் பதவியேற்றுக் கொண்ட அல்பனீஸ் மீண்டும் பிரதமராகத் தொடர்ந்து அரசை வழிநடத்த உள்ளார். இந்த வெற்றியின் மூலம், அவுஸ்திரேலியாவில் கடந்த இருபது ஆண்டுகளில், தொடர்ச்சியாக அடுத்தடுத்த தேர்தல்களில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக ஒருவர் மீண்டும் பிரதமர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இது அவுஸ்திரேலிய வரலாற்றில் மிகப்பெரிய சாதனையாகவே பார்க்கப்படுகிறது. ஆயினும் வாழ்க்கைச் செலவு அழுத்தங்கள், அதிக பணவீக்கம் மற்றும் அதிக வட்டி விகிதங்கள் மற்றும் வீட்டுவசதி மற்றும் வாடகை போன்ற காரணங்களில் மக்கள் விரக்தியடைந்துள்ள சூழலில் இந்த தேர்தல் வெற்றி மூலம் ஆளுங்கட்சி பல சவால்களை எதிர்கொள்ள உள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# அரசு வெறும் வாக்குறுதிகளை வழங்கியதே தவிர எந்தத் திட்டங்களும் அவர்களிடம் இல்லையாம்

## கடுமையாகச் சாடுகிறார் ஜீவன்

(கேதீஸ்)

இந்த அரசாங்கம் மக்களிடம் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியபோதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த ஒரு திட்டமும் அவர்களிடம் இல்லை. ஜனாதிபதியின் மீது எமக்கு நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கிடையாது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலையில் அமைந்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வரவு செலவு திட்டத்தில் சம்பள உயர்வுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரியவில்லை. ஆனால் அரசாங்க மூலம் வரவு செலவு திட்டத்தில் சம்பள உயர்வை வழங்குவோம் என்கின்றனர். ஏன் இப்படி அப்பட்டமான பொய்யை கூறுகின்றனர் எனத் தெரியவில்லை.

வரவு செலவு திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிப்பை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர். அதனை நாம் வரவேற்கின்றோம். நேற்று முன்தினம் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் ஆளுங்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறுகின்றார் இந்திய அரசாங்கம் 3000 மில்லியன் நிதி ஒதுக்கீடு வழங்கவில்லை என்கிறார்.

இந்திய அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்தது கூட அவருக்கே தெரியவில்லை என்றால் நாங்கள் என்ன செய்வது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மலையக மக்களின் 200 வருட பூர்த்தினை முன்னிட்டு 3000 மில்லியன் நிதி வழங்கப்படும் என அவர் தெரிவித்திருந்தார்.

இந்திய அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்தது உங்களுக்கு தெரியவே இல்லை என்றால் இந்திய அரசின் வெளிவிகார அமைச்சின் ஊடாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதாரபூர்வமாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி 3000 மில்லியன் ரூபா நிதி வழங்கியுள்ளார். நான் அமைச்சராக இருந்தபோது பல்வேறு திட்டங்களை ஆவணம் மூலமாக தயாரித்து இந்திய தூதருக்கு வழங்கியிருக்கின்றேன். ஜீவன் தொண்டமான் கொண்டு வந்த திட்டம் என்பதால் இப்போது அரசாங்கம் இந்த திட்டத்தை ஆரம்பத்திலிருந்து முன்னெடுக்க முயற்சிக்கின்றதா?

ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கே தெரியவில்லை என்னென்ன திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று. நான் இந்திய அரசாங்கத்தின் பத்தாயிரம் வீட்டு திட்டங்களை ஆரம்பித்தேன். அதில் 1300 வீடுகள் எமது காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன. 1700 ரூபா அடிப்படை சம்பளமும் அதற்கு மேலான கொடுப்பவை வழங்குவதற்கு அரசாங்கம் முடிவு எடுத்து இருக்கின்றது. இதற்கான எதிரொளியாக எதிர்வரும் காலங்களில் தொழில் அமைச்சுடனும் பெருந்தோட்ட முதலாளிமார் சங்கத்துடனும் இன்னும் பேச்சுகள் ஆரம்பிக்கப்படவில்லை என ஆளுங்கட்சியை பிரதிநிதித்துப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் தொலைக்காட்சி நிகழ்சியொன்றில் கூறினார்.இது வரவேற்கத்தக்க விடயம்.



ஆனால் அதே நிகழ்ச்சியில் மறுநாள் ஆளுங்கட்சியின் இன்னொரு உறுப்பினர் அடிப்படை சம்பளமாக 1700 ரூபா பேச்சு முடிவுற்று இறுதி கட்டத்தை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றார். இந்த இரண்டிலும் எது உண்மை என்று எங்களுக்கு தெரியவில்லை. கடந்த வாரம் தலவாக்கலை நகரிலே இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் ஜனாதிபதி 1700 ரூபா அடிப்படை சம்பளத்தை வழங்க வலியுறுத்துகின்றோம் என்கின்றார். இதில் எது உண்மையென்று புரியவில்லை. 2020 ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனித்துவமாக தொழிற்சங்க பலத்தை மாத்திரம் வைத்துக்கொண்டும் ஓர் இராஜாங்க அமைச்சை மாத்திரம் வைத்துக்கொண்டும் முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சு நடத்தி அடிப்படை சம்பளமாக ஆயிரம் ரூபாய் பெற்று கொடுத்தது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 8 மாதங்கள் ஆகியும் இன்னும் வாய்ப்பேச்சால் மட்டுமே சம்பள அதிகரிப்பை கூறி வருகின்றது. இதனை எமது மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். - என்றார்.




காலைக்கதிர்
Kalaikkathir

# கிளிநொச்சி மாவட்ட 2 பிரதேச சபைகளுக்குமான தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

## மாவட்ட பதில் செயலாளர் முரளிதரன் தெரிவிப்பு

2025ஆம் ஆண்டுக்கான கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளுக்குமான தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என மாவட்ட பதில் செயலாளர்.முரளிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில் -

மாவட்டத்தில் 102387பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர். 108 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெறவுள்ளது. 40 வாக்கெண்ணும் நிலையங்களில் வாக்கெண்ணும் பணிகள் முன்னெடுக்கப் படவுள்ளது. 1450 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

மாற்றுவலுவுள்ளோருக்கானஏற்பாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. மாவட்டத்தில் தனியார் துறைகளில் கடமை புரியும் ஊழியர்களுக்கு சட்ட விதிகளுக்கு அமைய தனியார் நிறுவனங்களின் தலைவர்கள் விடுமுறைகளை வழங்கி ஊழியர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்துமாறும் அரசியல்கட்சிகள் மற்றும் சுயேச்சைகுழுக்கள் சுயாதீனமான தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டார். 316

# குளத்திற்கு குளிக்கச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி இறப்பு

கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் ஒன்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பூநகரி ஜெயபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரியாலை நாகபடுவான் குளத்தில் நான்கு சிறுவர்கள் குளத்தில் குளிக்கச் சென்றுள்ளனர்.

தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதில் ஒரு சிறுவன் நீரில் மூழ்கி காணாமல் போன நிலையில் கிராமவாசிகள் ஒன்றிணைந்து குறித்த சிறுவனை தேடி நீண்ட நேரங்களின் பின் சிறுவன் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்டுள்ள சிறுவனின் சடலம் உடல் கூற்று பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் ஜெபுரம் மற்றும் முழங்காவில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# பயிற்சியும் செயலமர்வும்

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை அல் உஸ்வா மீட்பு படையணியினர் அனர்த்த காலங்களில் சாரணர் முறைகள் மூலம் எவ்வாறு பொதுமக்களை பராமரித்தல் தொடர்பான ஒரு நாள் செயலமர்வு சனிக்கிழமை சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டம் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் அல் உஸ்வா இஸ்லாமிக் நலன்புரி அமைப்பும் இணைந்து 200 மணித்தியாலம் கொண்ட பயிற்சி நெறியை வழங்கி வருகின்றது.

இதன் அடிப்படையில், சாரணர் விதிமுறைகள், தலைமைத்துவ பயிற்சி, அனர்த்த காலங்களில் பொதுமக்கள் தங்குவதற்கான முகாம் எவ்வாறு அமைத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் வழங்கப்பட்டதுடன், பயிலுணர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு வளவாளர்களால் பதிலும், செயன்முறையும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்விற்கு, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி.பிரபாசங்கர் கலந்து கொண்டதுடன், செயலமர்விற்கு வளவாளராகவும், பயிற்சியாளர்களாகவும் ஓய்வு பெற்ற உணவு மருந்து பரிசோதகரும், சாரணர் பயிற்றுனர் தலைவர் எஸ். தஸ்தகீர், சாரணர் பயிற்றுனர் தலைவர் எம். அப்துல் சலாம் (அதிபர்), உதவி பயிற்றுனர் தலைவர் மேஜர் கே.எம். தமீம், சாரணர் ஜனாதிபதி விருது பெற்ற ஐ.எம். இஹ்ஸாஸ் ஆகியோர் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.





# சாவகச்சேரியில் மணற் கொள்ளையர்களால் ஊடகவியலாளருக்கு தொடர் அச்சுறுத்தல்!

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

சுயாதீன ஊடகவியலாளரும்–தேர்தல் கண்காணிப்பாளருமான சாவகச்சேரியைச் சேர்ந்த தவராசா சபேசனுக்கு தொடர்ச்சியாக மணற்கொள்ளையர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வந்த நிலையில் அது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மேற்படி மணற் கொள்ளைக் குழுவினர் ஊடகவியலாளருடைய தந்தையாருக்கு விபத்தை ஏற்படுத்தி விட்டுஅது தொடர்பாகப்பொலிஸாருக்கு தெரியப்படுத்தாமல்அவ்விடத்தைவிட்டு அகன்ற பின்னர் இரவு வேளையில் தொலைபேசியில்ஊடகவியலாளருக்கு அழைப்பை எடுத்து பணம் கேட்டு மிரட்டியுள்ளனர்.

அத்துடன்தாம்விபத்துஏற்படுத்திய சம்பவத்தைவெளியேதெரிவித்தாலோ அல்லது பணம் தராவிட்டாலோ மீண்டும் இவ்வாறான விபத்துக்களை ஏற்படுத்துவோம் எனவும் கூறி மிரட்டியுள்ளனர்.

அதன் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர் சுபேசன் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த



வேளையில் தொடர்ச்சியாக பல தடவைகள் தொலைபேசியில் அழைப்பெடுத்து உயிர் அச்சுறுத்தல் விடுத்ததுடன்–அவருடைய தேர்தல் கடமைகளுக்கும் இடையூறு விளைவித்த நிலையில் மேற்படி சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட ஊடகவியலாளரால் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னராகவும் கள்ள மணல் அகழ்வு தொடர்பாக அறிக்கையிட்டமைக்காக மேற்படி ஊடகவியலாளரை மணற் கொள்ளையர்கள் அச்சுறுத்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பனைசார் ஏற்றுமதி 350 சதவிகிதமாக அதிகரிப்பு: கள்ளின் கொள்முதல் பெறுமதி இரட்டிப்பாகும்

## பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் தெரிவிப்பு

(சுபேசன்)

பனைசார் ஏற்றுமதி குறிப்பிட்ட காலத்திற்குள் 350 சதவிகிதமாக அதிகரித்துள்ள நிலையில் பனங்கள்ளின் கொள்முதல் பெறுமதி இரட்டிப்பாகும் வாய்ப்புக்காணப்படுவதாக பனை அபிவிருத்திச்சபையினுடைய தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.



தென்மராட்சி கொடிகாமத்தில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துரைத்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

எதிர்காலத்தில் பனம் தொழிலாளர்கள் கள்ளினை நிலத்தில் ஊற்றும் நிலை ஏற்படாது. கள்ளின் விலையை இரட்டிப்பாக்க பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுக்கும். இதனூடாக பனை சார் உற்பத்தியாளர்களுடைய வாழ்வு நிச்சயமாக மேம்படும்.

சகல பனந் தொழிலாளர்களும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் ஊடாக இதனைச் சாத்தியமாக்க முடியும்.

திக்கம் வடிசாலையை மீட்டது போன்று கைதடி, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் கிழக்கு மாகாணம் ஆகிய இடங்களிலும் தனியார் மயப்படுத்தப்பட்டிருக்கும் பனை சார் உற்பத்தித் தொழிற்சாலைகள் மீட்கப்பட்டு அவை மீளவும் பனை சார் சங்கங்களிடம் ஒப்படைக்கப்படும்.

கடந்த காலத்தில் பனைசார் உற்பத்தியாளர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் பெரும்பாலும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஊழல் அற்ற ஆட்சியாளர்களால் தான் இது சாத்தியமாகியுள்ளது. - என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏற்பாடுகள் யாழில் கள ஆய்வு

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக வாக்குப்பெட்டிகளை அனுப்பும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில், மேற்கொள்ளப்பட்டுவரும் ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக யாழ் மாவட்ட பதில் செயலாளரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் கள ஆய்வை மேற்கொண்டார்.

இதன்போது, யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க கலந்து கொண்டு தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இக் கள ஆய்வில் மண்டப ஒழுங்குகள், போக்குவரத்து, பொது வசதிகள், நலனோன்பு வசதிகள், மின்சார வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டதுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இக் கள ஆய்வில் பிரதித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் உதவி தெரிவாத்தாட்சி அலுவலர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.





# ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் பிரதமர் ஹரினியுடன் சந்திப்பு

ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் நககதானி, பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவை அலரிமாளிகையில் ஞாயிற்றுக்கிழமை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் நீண்டகால இருதரப்பு நட்புறவு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது, மேலும் ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்புத்துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தோ-பசுபிக் பிராந்தியம் முழுவதும் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கான முயற்சிகளுக்கு ஜப்பானின் ஆதரவை ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் உறுதிப்படுத்தினார்.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய உறவுகளில் இலங்கையின் மூலோபாய முக்கியத்துவத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.


நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு ஜப்பானிய அரசாங்கம், குறிப்பாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் தொடர்ந்து அளித்து வரும் ஆதரவிற்கு பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். வெளிப்படைத்தன்மை, பொருளாதார சீர்திருத்தம் மற்றும் தேசிய மாற்றத்திற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டையும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

காலநிலை மாற்றம், மனிதாபிமான உதவி மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற பொறுப்புகளை உள்ளடக்கியதாக இலங்கையின் பாதுகாப்புப் படைகளின் பங்கை விரிவுபடுத்துவதற்கான அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வை குறித்தும் பிரதமர் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்.

வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட ஐந்து முக்கிய துறைகளில் இராஜதந்திர உறவுகளை மேலும் விரிவுபடுத்தவும் இருதரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதர் அகியோ இசோமாட்டா உட்பட ஜப்பான் மற்றும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.





# அதிகரித்து வரும் ஆஸ்துமா நோய்

நாட்டில் தற்போது ஆஸ்துமா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உலகளவில் ஒவ்வொரு 100,000 பேரில் 3,340 பேர் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக களுபோவில போதனா வைத்தியசாலையின் சுவாச நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஆஷா சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

மே மாதம் 6 ஆம் திகதி உலக ஆஸ்துமா நோய் தினம் ஆகும்.

உலகளவில் இளைஞர்களிடையே ஆஸ்துமா அதிகரித்துள்ளது. இன்ஹேலர் அடிப்படையிலான சிகிச்சையானது பக்க விளைவுகளை ஏற்படுத்தாமல் ஆஸ்துமாவை திறம்பட நிர்வகிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்கள் மத்தியில் ஆஸ்துமா பரவலாக இருந்தாலும், நாட்டில் பல தனிநபர்கள் கண்டறியப்படாமல் உள்ளனர் என சுவாச நோய் வைத்திய நிபுணர் சமன்மலி தல்பதடு எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். தெல்லிப்பழை உயர் பாதுகாப்பு வலயபகுதியில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அதிகாரிகள் பயணம்






யாழ்ப்பாணம், தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை பிரதேசத்தின் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 40.7 ஏக்கர் காணியானது வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டதற்கமைய, தெல்லிப்பழை பிரதேசத்திற்கு அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் சனிக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு நேரடியாக விஜயம் செய்தார்.

அந்த வகையில் வசாவிளான் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஒட்டகப்புலம் புனித அமலோற்பவ மாதா தேவாலயத்தில் பங்குத்தந்தை ஜே. ஏ. அருள்தாஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற பிராத்தனையில் பங்குகொண்டு, அங்கு கூடியிருந்த மக்களுடன் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்ட 20 ஏக்கர் காணியினை பொதுமக்களுடன் சென்று பார்வையிட்டார்.

# தென்கிழக்கு பல்கலையின் 17ஆவது பட்டமளிப்பு இரண்டு நாள்களாக கோலாகலக் கொண்டாட்டம்





(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது ஆண்டு பொது பட்டமளிப்பு விழா, சனிக்கிழமை பல்கலைக்கழகத்தின் பிரதான அரங்கில் ஆரம்பமானது.

ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் பதில் உபவேந்தர் யூ.எல்.மஜீத் தலைமையில் சனி, மற்றும் ஞாயிறு இரு தினங்களாக நடைபெறும் இப்பட்டமளிப்பு விழாவில் ஆறு அமர்வுகளில் 2077 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர்.

சனிக்கிழமை முதலாம் நாள் முதல் அமர்வில் இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதி யசந்த கொடகொட பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இரண்டாம் அமர்வில் களனி பல்கலைக்கழகத்தின் பொருளாதார துறை பேராசிரியர் கலாநிதி சீதா.பி. பண்டாரவும், மூன்றாவது அமர்வில் இலங்கைக்கான சவூதி அரேபிய நாட்டின் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானியும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

முதல் நாளில் பிரயோக விஞ்ஞான பீடத்தில் 172 மாணவர்களும், பொறியியல் பீடத்திலிருந்து 82 மாணவர்களும், தொழினுட்பவியல் பீடத்திலிருந்து 102 மாணவர்களும், கலை கலாசார பீடத்திலிருந்து 314 மாணவர்களும் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்திலிருந்து 342 மாணவர்களும் பட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

இரண்டாம் நாள் முதல் அமர்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் துணைத்தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கே.எல் வசந்த குமாரவும் இரண்டாம் அமர்வில் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ துறையின் பேராசிரியர் கலாநிதி மனோஜ் சமரதுங்கவும் மூன்றாவது அமர்வில் யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் ரீ. வேல்நம்பியும் கலந்துகொண்டனர்.

இதன்போது முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடத்திலிருந்து 378 மாணவர்களும் வெளிவாரி பட்டப்படிப்பு 687 மாணவர்களுமாக 2077 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர் என பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் தெரிவித்தார்






# தம்பலகாமம் பிரதேசசெயலக 49ஆவது விளையாட்டு விழா

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 49 ஆவது பிரதேச மட்ட விளையாட்டு விழா அண்மையில் முள்ளிப்பொத்தானை ஈச்ச நகர் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

குறித்த பிரதேச மட்ட போட்டியில் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட 43 விளையாட்டு கழகங்கள் பங்குபற்றின.

இதில் சிறு விளையாட்டுக்கள் மற்றும் பெரு விளையாட்டுக்கள் என இடம் பெற்ற நிலையில் கிரிக்கட், எல்லை,கபடி,கர பந்து, மெய்வல்லுனர் ஆகிய போட்டிகள் இடம்பெற்றன.

இறுதிப் போட்டிக்கு அரபா கழகமும் ஈச் கழகமும் தெரிவாகியதுடன் ஒட்டு மொத்த சம்பியனாகவும் தெரிவாகின. குறித்த போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும் கேடயங்களும் இறுதி போட்டி நிகழ்வின் போது வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த போட்டியில் வெற்றியீட்டியவர்கள் மாவட்ட மட்டங்களுக்கு அழைத்து செல்லப்படவுள்ளனர் இவர்களுக்கான விளையாட்டு பயிற்சிகளை தம்பலகாமம் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம்.ஹாரிஸ் திறம்பட வழங்கி வருகின்றார்.

இறுதி போட்டிக்கு பிரதம அதிதியாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி மற்றும் கடல்சார் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் வடக்கு கிழக்கு உதவிப் பணிப்பாளர் ஸ்ரீபதி மற்றும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் விமலசேன உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.








## பதில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலாத்துறை அமைச்சிற்கும் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராகவும், டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, டிஜிட்டல் பொருளாதார பதில் அமைச்சராகவும், பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பாதுகாப்பு பதில் அமைச்சராகவும், வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# தந்தையின் ஞாபகார்த்தமாக பிள்ளைகளால் பாடசாலைக்குச் சிறுவர் நூலகம் அமைப்பு

(பர்ஸான்)

மரணமடைந்த தந்தையின் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகள் வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலயத்திற்கு சிறுவர் நூலகம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ள முன்மாதிரி மிக்க நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பிரதேசத்தை சேர்ந்த மர்ஹூம் அல்ஹாஜ் அஹமட் உசனார் அவர்களின் ஞாபகார்த்தமாகவே நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு அதனை கையளிக்கும் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையின் நீண்ட கால தேவைகளின் ஒன்றாக இருந்து வந்த சிறுவர் நூலகத்தின் அவசியம் குறித்து வாழைச்சேனை பிரதேசத்தில் நல்ல பல ஆளுமைகளை உருவாக்கிய மர்ஹூம் அல்ஹாஜ் அஹமட் உசனார் அவர்களின் ஞாபகார்த்தமாக பாடசாலையில் அமைத்து தருமாறு பாடசாலையின் அதிபர் ஷல்மானுல் ஹரீஸ் அவரது புதல்வர்களிடம் வைத்த கோரிக்கையின் பயனாக நூலகம் உத்தியோகபூர்வமாக மாணவர்கள் நலன் கருதி பாடசாலைக்கு கையளிக்கப்பட்டது.

அதிபர் ஷல்மானுல் ஹரீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக்கல்விபணிப்பாளர் ஏஎம்.எம்.தாஹிர் மற்றும் மட்டக்களப்பு மத்திய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.அபுல்ஹஸன் ஆகியோர் கலந்து கொண்டதுடன், இஸ்லாம் பாட ஆசிரிய ஆலோசகர் அஷ்ஷெய்க் எஸ்.எம். கடாபி (சிறாஜி) மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் எம்.பீடி.கான், ஓட்டமாவடி எக்ஸலண்ட் கொலேஜ் பணிப்பாளர் எம்.எஸ்.ரயீஸ் (நளீமி), பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் ஏ.சீ.எம்.முனவ்பர் ஆகியோரும் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.





மேலும் மர்ஹூம் அல்ஹாஜ் அஹமட் உசனார் தம்பதிகளின் குடும்ப உறுப்பினர்களில் இருந்து பிரதேச வைத்தியர் ஏ.யூ.அபுல்கலாம், ரயில் நிலைய அதிபர் ஏ.யூ.நுபைஸ், அதிபர் சேவைகள் உத்தியோகத்தர் நஜ்முன்ஷிபா மற்றும் அவர்களின் பிள்ளைகளான ஆசிரியர்கள் பலரும் கௌரவ அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இந்த நூலகத்தை பாவிக்கும் காலம் எல்லாம் மர்ஹூம் அல்ஹாஜ் அஹமட் உசனார் தம்பதிகளின் மண்ணறை வாழ்வு சிறப்பாக அமையும் என்பதோடு, அந்நூலகத்தை உயிர்ப்புடன் பாடசாலை நிர்வாகம் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று கோட்டக் கல்வி பணிப்பாளர் ஏ.எம்.எம்.தாஹிர் தமது உரையில் தெரிவித்தார்.

மாணவர்களின் விசேட காலை ஆராதனை நிகழ்வாக இடம்பெற இந்நிகழ்வில் நூலகத்தின் அவசியம் குறித்து மாணவர்களால் கவிதை மற்றும் உரைகள் நிகழ்த்துப் பட்டதுடன் நூலகத்தின் சாவி உத்தியோகபூர்வமாக அதிபர் அவர்களிடம் குடும்ப உறுப்பினர்களால் கையளிக்கப்பட்டது.

இதன்போது, விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றதுடன் பாடசாலையில் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் இனிப்பு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.




உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# விடுதலைப் புலிகளிடமிருந்த நகைகளை அரசு முஸ்லிம்களுக்கு வழங்கவேண்டும்

## முபாறக் அப்துல் மஜீத் கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)



விடுதலை புலிகளிடமிருந்த நகைகள் அரசுக்கு கிடைத்துள்ளமை ஜனாதிபதி அநுர குமார அரசுக்கு கிடைத்த வெற்றியாகும் என்பதுடன் இந்த நகைகளில் அதிகமானவை வடக்கு முஸ்லிம்களிடமிருந்து புலிகளால் பறிக்கப்பட்டவை என்பதால் அந்த நகைகளை அரசு முஸ்லிம்களுக்கு வழங்க வேண்டும் என ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் அரசை கோரியுள்ளது.

இது பற்றி உலமா கட்சித்தலைவரும் ஐக்கிய காங்கிரஸ் ஸ்தாபக தலைவருமான முபாறக் அப்துல் மஜீத் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

1990 ஆம் ஆண்டு வடக்கில் தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்து வாழ்ந்த முஸ்லிம்களை இன ரீதியாக பிரித்து விடுதலைப் புலிகள் அம்மக்களின் அனைத்து சொத்துக்களையும் ஆயுத முனையில் பறிமுதல் செய்து வெளியேற்றியது யாவரும் அறிந்ததே.

இதன் போது வடமாகாண முஸ்லிம்களின் ஒட்டுமொத்த உடைமைகளையும் பறித்து எடுத்து விட்டு உடுத்திய உடுப்புடன் வெளியேற்றப்பட்ட போது பெண்கள் அணிந்திருந்த தங்க ஆபரணங்களையும் கைகளில் மறைத்து கொண்டு வருவதற்கு இருந்த நகைகளையும் குறிப்பாக சிறுமிகளின் காதுகளிலும் கழுத்துகளில் இருந்த நகைகளைக் கூட கழற்றி எடுத்து விட்டே துரத்தினர்.

அதன் பின் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் புலிகள் பதுக்கி வைத்திருந்த பெருந் தொகையான நகைகளை அரச படையினர் கைப்பற்றி அதனை தாம் கொள்ளையடிக்காது. அரசாங்கத்திடம் ஒப்படைத்தது பாராட்டத்தக்க செயலாகும். அந்த நகைகள் நீதி மன்ற உத்தரவில் பாது காத்து வைக்கப்பட்டிருந்து தற்போதைய அரசு பொலிஸாரின் பாதுகாப்பில் பரிசீலனைக்காக கொடுக்கப்பட்டுள்ளதுடன்நீதிமன்ற உத்தரவுடன்அவற்றைஇழந்தமக்கள் உரிய ஆதாரங்களை காட்டினால் வழங்கப்படலாம் என்ற அறிவிப்பும் விடுக்கப்பட்டுள்ளது.

என்றாலும் அதிகமான முஸ்லிம்களிடம் எந்த வித ஆதாரமும் இல்லை என்பதுடன் நகைகளை பறி கொடுத்த பலர் மரணமடைந்து விட்டனர். இவ்வாறான நிலையில் பெருமளவில் இழந்த முஸ்லிம்களின் நகைகளை அரசு நியாயமான முறையில் ஆய்வு செய்து முஸ்லிம்களுக்குரிய நகைகளை மதிப்பீடு செய்து அவர்களிடம் இதற்கான சத்திய பிரமாண கடிதம் பெறப்பட்டு வழங்க வேண்டும் என கௌரவ ஜனாதிபதியை கேட்டுக்கொள்கிறோம். - என்றார்.

# நிந்தவூரில் ஹெரோயின் போதைப் பொருளுடன் விசேட அதிரடிப் படையினரால் ஒருவர் கைது

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டப்பளம் பகுதியில் வைத்து ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்று சனிக்கிழமை இரவு 07.00 மணியளவில் சாகாமம் விசேட அதிரடிப் படையினர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

சாகாமம் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புநடவடிக்கைகளின் போது, ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரை சாகாமம் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

நிந்தவூர் 23 ஐச் சேர்ந்த 32 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிராம் 160 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்ததுடன், சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது சாகாமம் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மற்றும் சாகாமம் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.05.2025இல் வெளியிடப்பெற்றது